பக்கங்கள் 06 விலை ரூபா 5-00

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM. இதழ்

தீபம் : 44 மே - 1995 ஒளி : 14

## இல்வாழ்க்கை

அறத்தாற்றின் இல்வாழ்க்கையாற்றின்புறத்தாற்றிற்
போ ஒய்ப் பெறுவது எவன் 46
இயல்பினான் இல் வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை 47
ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல் வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை. உடைத்து 48
அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று 49
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். 50

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,
இல 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

## அதிகாரிகளுடன் கூட்டுறவாளர்கள் முரண்படாமல் இருக்கவேண்டும்!

''கூட்டுறவுத்துறை எந்தஒரு அதிகாரிக்கும அடைமானம் வைக்கப்பட மாட்டாது. இந் நிலையில் அதிகாரிகளுடன் முரண்படாதவகையில் கூட்டுற வாளர்கள் நடந்துகொள்ள வேண்டும். ''

தீவகக் கோட்ட கூட்டுறவா ளர்கள் மத்தியில் உரையாற் றிய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா மேற்கண்டவாறு கூறினார்.

வேலணை பல நோ. கூ. சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு பொ. மாசிலா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.


திரு. சுந்தரம் டிவகலாலா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

இன்றைய சூழ்நிலையில் கூட்டுறவுத்துறையை புதிய திசையில் இட்டுச்செல்ல வேண் டியது அவசியமாகிறது. வெறு மனே உணர்ச்சிகளில் நம் பிக்கைவைத்து செயற்படாது உணர்வுகளில் நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும்.

இராணுவ அனர்த்தங்களி னால் ஏற்பட்ட தீவுப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங் கங்களின் இழப்பீட்டுத் தொகையை பெறக்கூடிய வகையில், அமைச்சரவை மட் டத்திற்குரிய நடவடிக்கை களை மேற்கொள்ளவேன்.

இக் கூட்டத்தில் வேலணை பல நோ. கூ. சங்கத்தலைவர் திரு. பொ. மாசிலாமணி, புங்குடுதீவு - நயினாதீவு பல நோ. கூ. சங்கத்தலைவர், திரு. ப. கனகலிங்கம், ஊர் காவற்றுறை பல நோ. கூ. சங்கத்தலைவர் திரு. தி. சுந் தரலிங்கம், காரைநகர் பல நோ. கூ. சங்கத்தலைவர் திரு. எஸ். விக்கினேஸ்வரன், மற்றும் பனை தெ. வ. அ. கூ. சங்க பிரதிநிதிகள், கடறொழிலா ளர் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)



"ஐக்கிய தீபம்" ஏப்பிரல் மாத இதழை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா விடமிருந்து புங்குடுதீவு - நயினாதீவு பல நோ. கூட. சங்கத்தலைவரும், தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவருமான திரு. ப. கனக லிங்கம் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம் யாழ். மாவ. கூட்டுறவுச சபை மண்டபத்தில் இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

# மாவட்ட கூட். சபையின் செயற்பாடுகளை விஸ்தரித்து வலுப்படுத்த வேண்டும்!

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையை மாவட்ட நிலையில் நிறுவன ரீதியாகக்கட்டி எழுப்பி, வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை கூட்டுறவு நிறுவனங்களுக்கு முன்னர் ஆற்றிய சேவைகளை இன்று மாவட்ட கூட்டுறவுச் சபை மூலம் முன்னெடுத்து செல்வதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கை களையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

மாவட்ட ரீதியில் மாவட்ட கூட்டுறவுச் சபை கூட்டுறவுத் துறையில் அனைத்து கூட்டு றவு நிறுவனங்களில் அதி உயர்ந்த நிறுவனமான இந் நிறுவனத்தை நிறுவன ரீதி யாக தமிழீழ மட்டத்தல் கட்டி எழுபப வேண்டியதை எமது தார்மீக கடமையாகக் கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் புதிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் உரையாற் றிய கூட்டுறவுச்சபையின புதிய தலைவர் திரு தா. கந்தசாமி இவ்வாறு கூறினார்

கூட்டுறவு துறையின் வளர்ச்சியில் யாழ். மாவட்டம் ஏனைய மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த கால கட்டத்தில் வடபகுதி ஐக்கிய மேற்பார் வைச்சபை அன்று செய்துவந்த வேலைத் திட்டங்களை இன்றய தேவை கருதி நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

கூட்டுறவு நிறுவனங்களுக் கான இலாகாவின் பங்களிப்பு குறைந்து போயுள்ள இன்றய சூழ் நிலையில் கூட்டுறவு நிறு வனங்களின் எண்பார்வை, அபிவிருத்தி வேலைகளைத் துரிதப்படுத்தி முடிக்கதேண்டி யுள்ளதால் மாவட்ட கூட்டுற வுச் சபையின் செயற்பாடுகளை விஸ்தரித்து கூட்டுறவு நிறுவ னங்களுக்கு உதவக் கூடிய வகையில் கூட்டுறவுச் சபையை வலுப்படுத்த வேண்டும்.

கூட்டுறவு நிறுவனங்களின் முகாமை மட்ட உத்தியோகத் தர்களுக்கு காலத்துக்குக்காலம் நவீன முகாமைத்துவ வேலைப் பட்டறைகள் நடாத்தி அவற் றில் பரீட்சைகளை வைத்து சான்றிதழ்கள் வழங்குவதற் கும் கூட்டுறவுச் சபை நட வடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைய சூழ் நிலையில், கூட்டுறவாளர்கள் மக்களின் நம்பிக்கையை பெறக் கூடிய வகையில் சேவையாற்ற முன் வர வேண்டும்

( 6-ம் பக்கம் பார்க்க )

## ஊழியர் சுயவிபரம் இல்லை ஆணையாளர் கவலை

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும், அதியுயர், முது நிலைத் தரங்களைச் சார்ந்த பணியாளர்களின் சுய விபரத் திரட்டுக்கள் எதுவும் வடக்கு கிழக்கு மாகாண சபையில இல்லை என்று கூட்டுறவு அபி விருத்தி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா கவலை தெரிவித்துள்ளார்.

பணியாளர்களின் இத்த கைய சுயவிபரம் எதுவும் மாகாண சபையில் இல்லாமை யினால், வெளிநாடுகளில் கிடைக்கவுள்ள துறைசார் புலமைபபரிசில்களுக்கு அவர் களை சிபார்சுசெய்ய முடியா மல் உள்ளது என்றும் தெரி வித்தார்.

## போனஸ் வழங்க ஏற்பாடு

ஊர்காவற்துறை பல நோ. கூ. சங்கம் 1991/92-ம், 1992/93-ம் ஆண்டுகளில் ஈட்டிய லாபத்தில இருந்து பணியா ளர்களுக்கு போனஸ் வழங்க தீர்மானித்துள்ளது.

14-5-95-ல் நடைபெற்ற சங்கத்தின விசேட பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களின் பிர காரம், சுற்று நிருபத்திற்கமை வாக 100 ரூபா பங்குபபணம் செலுத்திய அங்கத்தவர்க ளுக்கு பங்கிற்கான வட்டியை பங்குடன் சேர்ப்பதற்கும், யாழ்பபாணத்தில் பொருத்த மான இடத்தில் தேனீர்ச் சாலை ஒன்றை ஆரம்பிப்ப தற்கும் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## ஊழியர் சுயவிபரம்; ஆணையர் கோருகிறார்!

கூட்டுறவுச் சங்கங்களின் பணிபுரியும், அதியுயர், முது நிலை தரங்களைச் சார்ந்த பணியாளர்களின் சுய விபரத் திரட்டு ஒன்றை அனுப்பி வைக்குமாறு கூட்டுறவு அபி விருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா கூட்டு றவுச் சங்கங்களைக் கேட்டுள் ளார்.

இவ் விபரத்தில் பணியாளர் பெயர் அடையாள அட்டை இலக்கம், வயது, மாவட்டம், பணிபுரியும் சங்கப் பெயர், வகிக்கும் பதவி, சேவைக் காலம், கல்வித்தகமை, தொழில்சார்தகைமைகள், கூட் டுறவுப் பயிற்சியின் தன்மை உள்ளூரில் பெற்ற புலமைப் பரிசில், ஆங்கில தகமைச் தேர்ச்சி, ஒழுக்காற்று விசா ரணைக்கு உட்பட்டிருப்பின் அது பற்றிய விபரம், ஆகியன கேட்கப்பட்டுள்ளது.

## தெல்லிப்பளை பல நோ. கூ. சங்கம் கல்விவசதிக்கு நிதியுதவி

தெல்லிப்பளை பல நோ. கூ. சங்கம் சுன்னாகம் மக்கள் வங்கியில் 47 50000 ரூபா வினை நிரந்தர வைப்பில் வைத்து தனது நிதிநிலையை ஸ்திரப்படுத்தியுள்ளதை 1992 முதல் 1994-ம் ஆண்டு வரை யிலான முன்னேற்றகரமான வளர்ச்சி அறிக்கையில் தெரி வித்துள்ளது.

நுகர்ச்சிப்பகுதி நிலையான வைப்பாக 30 லட்சரூபாவும், பணியாளர் இலைணப்பாற்று நிதிநிலையான வைப்பாக 15 லட்சரூபாவும், கல்வி அபிவி ருத்திக்கு 250000 ரூபாவும் நிரந்தர வைப்பலிடப்பட்டுள் ளதாகவும் கல்வி நிதியினால் கிடைக்கப் பெறும் வட்டிப் பணத்தை சங்களல்லைப் பரப் பில் உள்ள வறிய மக்களின் கல்வித் தேவைக்குப் பயன் படுத்தப்படவுள்ளதாக அறிக் கையில் தெரிவிக்கப் பட்டுள் ளது.

## இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தருக

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த நான்கு தீவக பல நோ. கூட் டுறவுச் சங்கங்களின் இழப்பீட் டுத்தொகையான 2 கோடியே 16 லட்ச ரூபாவினை அரசி டம் இருந்து பெற்றுத்தரு மாறு வடக்குகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணை யாளர் திரு. சுந்தரம் டிவக லாலாவிடம் தீவகப் பல. நோ கூ. சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த இழப்பீட்டுத்தொகை யில் புனர்வாழ்வுப் பகுதியின ரால் வழங்கப்பட்ட நிவார ணப் பொருட்களின் பெறும தியை வேலணை, புங்குடுதீவு- நயினாதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் பல நோ. கூ. சங் கங்களிடம் இருந்து புனர்வாழ் வுப்பகுதி ஒருகோடி ரூபாவுக்கு மேல் அறவிட்டு விட்டது.

இந்நிலையில் தீவகச் சங்கங் கள், இடம்பெயர்ந்த மக்க ளுக்கு நுகர்ச்சிப்பொருள் விநி

(6ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**சிந்தனைச் சுடர்**

"கூட்டுறவுத் துறையில் பணியாற்றுபவர்கள் எவ்வித தடுமாற்றமும் அடையாமல் மிக நிதானத்துடன் செயலாற்ற வேண்டும்.

அமரர் வீரசிங்கம்

## ஐக்கிய எண்ணம்

### காலதிற்கேற்ற சிந்தனை !

"கூட்டுறவுக் கொள்கைகளுக்கும், தத்துவங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் ஒத்திசைவாக கூட்டுறவுத் துறையை, இந்தமண்ணின் தேவை கருதி நவீன மயப்படுத்தப்பட்ட முகாமைத்துவத்தின் கீழ் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்"

"இன்றைய போர்க் காலச் சூழலில், அர்ப்பணிப்புக்களுடன் கூடிய சேவை மனப்பான்மை உள்ள கூட்டுறவாளர்கள் மக்களின் எதிர்பார்ப்புக்களை நன்குணர்ந்து அவற்றைப் பூர்த்தி செய்யக்கூடிய வலுவும், ஆற்றலும் உள்ளவர்களாக விளங்கவேண்டும்"

"இதற்காக; கூட்டுறவுத் துறையின் அபிவிருத்திக்கேற்ற வகையில் கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தங்களும், சுற்றுநிருபங்களில் மாற்றங்களும் செய்யப்பட வேண்டுமானால் அதற்கேற்ற வகையில் அவை மாற்றம் செய்யப்பட வேண்டியது அவசியம்"

வடக்கு கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அண்மையில் கூட்டுறவாளர்கள் மத்தியில் முன்வைத்த மேற்படிக் கருத்துக்கள் அனைவரதும் சிந்தனைக்குரியனவாகும்.

வடக்குக் கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தமிழீழப் பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து அங்குள்ள கூட்டுறவாளர்களைச் சந்தித்து கூட்டுறவுத்துறையில் காணப்படும் - காணப்படுகின்ற குறைகளையும், தேவைகளையும் இனங்கண்டு முன்வைத்த கருத்துக்களே ஆணையாளரின் இக்கருத்துக்களாகும். இந்த வகையில் அவரின் கருத்துக்களை சாமானியமான கருத்துக்களாக நாம் எடுத்துக் கொள்ள முடியாது.

இன்றைய சூழ்நிலையில் இடம்பெயர்ந்த நிவாரணம் மாணவர் மதிய உணவு முத்திரை, வறுமை நிவாரண உணவு முத்திரை போன்ற நிவாரணப் பணிகளில்தான் பல நோ. கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியமாக ஈடுபட்டுள்ளன. இவை நிறுத்தப்பட்டால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எவை எவையாக இருக்க வேண்டும் [illegible] சங்கங்களிடம் இருக்கவேண்டும். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், துறைசார்ந்த கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் தத்தம் துறைசார் தொழில் முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டிய பொருத்தமான தருணம் இதுவே, என கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூட்டுறவாளர்களிடம் எடுத்துக்கூறியிருப்பதையும் கூட்டுறவாளர்கள் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

எனவே எமது பொருளாதார வளர்ச்சியில் எதிர்காலத்தில் பெரும்பங்கினை வகிக்கவுள்ள கூட்டுறவுத் துறையை, அனைத்து வழிகளிலும், முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் கூட்டுறவாளர்களின் பன்முகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சி அவசியமாகும். இம்முயற்சியானது எமது பிரதேச மூலைமுடுக்குகளிலெல்லாம் கூட்டுறவின் சாயலை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இதனை உணர்ந்து கூட்டுறவாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும்.

*கூட்டுறவே நாட்டுயர்வு*

# கூட். அபிவிருத்தி ஆணையாளர் கூட்டுறவாளர் சந்திப்பு

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா யாழ் கூட்டுறவாளர்களுடன் அண்மையில் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் தொகுப்பறிக்கை இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## சங்க மட்ட சீரமைப்பு நடவடிக்கைகள்

அ) சங்கங்களினால் ஒப்படைக்கப்படும் மாணவர் மதிய உணவு முத்திரை. உணவு முத்திரை என்பவற்றிற்கு மீளளிப்புச் செய்வதில் ஏற்படும் தாமதத்தினால் சங்கங்களுக்குச் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ள மேலதிகப்பற்று வட்டிகளை சங்கங்கள் கணக்கிட்டு கூ. அ அலுவலரினால் உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். வட்டி அறவீடு இல்லாத விடத்தும் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் அதிஉயர், முதுநிலைப் பணியாளர்களின சுயவிபரங்களை கூட்டுறவு அபிவிருத்தி அலுவலரின் ஊடாக உறுதிப்படுத்தி கூ. அ. ஆணையாளருக்கு சமர்ப்பித்தல்.

இ) 1987-ம். ஆண்டிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட சொத்துக்களின் இழப்புக்களை அசையும அசையா ஆதனங்களின் கீழ் வகைப்படுத்தி, இழப்பின் தன்மை, இழப்பின் பெறுமதி ஏற்கனவே பெறப்பட்ட இழப்பீட்டு விபரங்கள், தொகை என்பன உள்ளடங்கலான புதிய கோரிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

ஈ) கூட்டுறவு நிறுவனங்களின் இயங்கா நிலையிலுள்ள தொழில் முயற்சிகளை மீள இயங்க வைத்தலுக்கான மறுசீரமைப்புத் திட்டங்களை புதிய முன் மொழிவுகளாக இழப்பீடுகளுக்கு மேலதிகமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

உ) கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வன் செயல் காரணமாக ஏற்பட்ட இறப்பு, ஊனமுறல், தொடர்பான விபரமும் பெற்ற நிவாரணம், சங்கம் வழங்கிய நிவாரணம், முன் வைக்கும் கோரிக்கை தொடர்பான தனியாள் பட்டியல் சமர்ப்பித்தல்.

## பல நோ. கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்களுடனான கலந்துரையாடல்

அ) வங்கிக்கடன் கோரி இதுவரை வழங்கப்படாத கடன் தொடர்பில் சங்கம் வங்கிக்குச் சமர்ப்பித்த ஆவணங்களின் பிரதிகளை ஒவ்வொரு கடன் தொடர்பிலும் தனித்தனியாக சமர்ப்பித்தல்.

ஆ) 1990-ம் ஆண்டிற்கு முன் நடைபெற்ற மொத்த வியாபாரமும் (பெறுமதி உள்ளடங்கலாக) பெற்ற மேலதிகமும் தொடர்பிலான அறிக்கையும் இதே அளவு தொகையை அல்லது அதற்கு மேலான தொகையை தற்போதைய சூழலில் மாற்றீடு செய்யத்தக்கதான செயற்திட்டம் தயாரித்து சமர்ப்பித்தல்.

இ) பிராந்திய மட்டங்களிலான நுகர்வு அங்காடிகளை கிளைக்குழுவின் தனிப்பொறுப்பில் நடாத்துவதற்கான திட்டங்களைச் சமர்ப்பித்தல்.

குறிப்பு :- பணியாளர்களுக்கு வழங்கப்படும் வேதனம் மூலம் ஏற்படும் இழப்பினை முன்னுரைக்கும் திட்டத்தின் ஊடாக சமனுறச் செய்தல் வேண்டும்.

ஈ) இடம் பெயர்ந்தபோது இழக்கப்பட்ட நிவாரண இருப்புப் பொருட்கள் தொடர்பில மேற்கொள்ளப்பட்ட அரச அறவீடுகள் உள்ளடங்கலான விரிவான அறிக்கையை திவ பல நோ. கூ. சங்கங்கள் சமர்ப்பித்தல் (ஏற்கனவே சமர்ப்பித்தவை நீங்கலாக)

உ) மக்கள் வங்கியுடன் தொடர்பு கொண்டு படிப்பு வரி தொடர்பான விரிவான அறிக்கைபெற்று சமர்ப்பித்தல்

எ) 1993 வெள்ளப் பெருக்கின்போது மானிப்பாய், சங்கானை பல நோ. கூ. சங்கங்கள் வரியோகித்த நிவாரணப் பொருட்களின் பெறுமதியும் மீளளிக்கப்படாத அரச அதிபருக்கு கையளித்த கொடுப்பனவு அட்டவணையின் பிரதியும் சமர்ப்பித்தல்.

ஏ) கொடிகாமம் ப. நோ. கூ. சங்கம் தனது முழுமையான ஆளணி மீளாய்விற்கான அறிக்கை சமர்ப்பித்தல்.

ஐ) வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம் தனது இடம் பெயர்ந்த கிளைகளின் இழப்பீடு கோரும் அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

ஒ) உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் 1987-ல் நடைபெற்ற இழப்பீட்டை கிளைரீதியாகத் தயாரித்து பொதுக் கூட்டத் தீர்மானத்துடன் கழித்தெழுதுவதற்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## பாரிய கூட்டுறவு சங்கங்களுடனான சந்திப்பு

அ) விவசாய தொழில் நுட்பம், தொழில் மேபாறிமுறை, உற்பத்திப் பதனிடல உள்ளீடு தொடர்பான திட்டமதிப்பாய்வினையும் நிதித் தேவைபற்றிய அறிக்கையும் சமர்ப்பித்தல.

ஆ) விவசாய சந்தைப்படுத்தும் சம்மேளனம் உருவாக்கப்பட்ட போது யாழ. மாவட்ட விவசாய சங்க சமாசத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒன்றிணைக்கப்பட்டமை தொடர்பான அறிக்கையை கூ. அ உ. ஆணையாளர் சமர்ப்பித்தல்.

இ) சி. க. கூ. சங்க சமாசத்தின் நிதி நிலை, நிதித்தேவை தொடர்பிலான அறிக்கைகள சமர்ப்பித்தல்.

ஈ) புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம தொடர்பாக, உடனடித் தொழிற்பாட்டிற்கான மூலதனம தற்போது உள்ள சொத்துக்களிலிருந்து தொழிற்படு மூலதனத்துக்கு பெறக்கூடிய மூலதனத்தின அளவு, மாதாந்தம் தேவைப்படும் மாறாச் செலவுகள், தொழிற்படு மூலதனத்தனதும் மாறாச் செலவுகளினதும மொத்தம மாதாந்தம் பெறப்படும் வருமானத்திலிருந்து சரியீடு செய்யத்தக்க தொகை மீதித்தேவை, என்பனவற்றை வெளிப்படுத்தும் நிதிக்கூற்றை கூ. அ. உ. ஆணையாளரிடம சமர்ப்பித்தல.

★ பூரண தொழில் முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு தற்போதைய நிலையில் அவசியப்படக்கூடிய பொறிமாற்றம, மாற்று சக்தி என்பவற்றை பெறக்கூடிய வேளையில அவசியப்படக்கூடிய நிதியையும, பொறித்தொகுதி, ஆளணி என்பவற்றை உள்ளடக்கிய மறுசீர் அமைப்புத் திட்டமும், உடனடியாக ஒரு பகுதியைச் சாத்தியமான முறையில செயற்படுத்தும் ஆலோசனையும்.

உ) கால்நடை உற்பத்தி வகை, மாதாந்த உற்பத்தி இலக்கு, உற்பத்தியாளர் எண்ணிக்கை, பிரதேசம், உற்பத்தியாளருக்கு வழங்கக்கூடிய தீவனம, மருந்து வகை, சந்தைப்படுத்தலுக்கான தற்போதைய வழிமுறை, மேலதிக உற்பத்திகளை துணை உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதற்கு அவசியமான வழிமுறைகள் பொறித் தொகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதான திட்ட அறிக்கையும் நிதித் தேவை அறிக்கையும் தயாரித்து சமர்ப்பித்தல்.

ஊ) கடற்றொழில்.

★ வடமாகாணத்தின் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள், அங்கத்தவர்கள், ஆகிய தரவுகளுடன் சங்கு ஏற்றுமதிக்கான அறிக்கையை வங்கியினால் எடுத்த தீர்வு நடவடிக்கை செலமதி விபரங்கள, பெற்ற காப்புறுதி ஆகிய விபரங்கள் உள்ளடங்கலாக கூ. அ. உ. ஆணையாளர் சமர்ப்பித்தல்.

★ கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க பிரதேச சமாசங்கள் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்துடன் இணைந்து மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பான திட்ட அறிக்கை.

★ கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் ஊடாக பின்வரும் தரவுகளைச் சமர்ப்பித்தல.

1. கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை பிரதேச ரீதியாக அவர்கள் ஈடுபடும் கடற்றொழில் வகைகேற்ப

2. பயன்பாட்டிலுள்ள கடற்கலன்களின் எண்ணிக்கை.

3. பயன்பாட்டிலுள்ள மீன்பிடி உபகரணங்களின் பெறுமதியும் அண்ணளவான மாதாந்த கடல் உற்பத்தியின பெறுமதியும்.

எ) வடபிரதேசத்தில் குடாநாட்டுக்கு வெளியே உள்ள ப. தெ. வ. அ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு பிரதேச ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் அளிக்கக் கூடிய பயிற்சித் திட்டத்தையும வகைக்கேற்ப பயிற்சியில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர் எண்ணிக்கையையும உள்ளடக்கியதாக அறிக்கை கூ. அ. உ. ஆணையாளரினால் சமர்ப்பித்தல்.

பனை, தென்னை வள பிரிவின் மாவட்ட மட்ட சம்மேளனம், மாகாணமட்ட உச்ச நிறுவனங்கள் அமைத்தலுக்கான மாதிரி கட்டமைவுகளின் உத்தேச வரைவுகள் தயாரித்தல்.

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுடனான சந்திப்பு

அ) கடற்தொழிலாளர், நிர்வாகிகள ஆகியோருக்கான சங்க மட்ட, பிரதேச மட்ட மாவட்ட மட்ட பயிற்சித் திட்டம் சமர்ப்பித்தல்.

ஆ) கண்டியிலிருந்து கட்டு மரங்களுக்கான மரம கொள்வனவு தொடர்பிலான வேலைத் திட்டம சமர்ப்பித்தல்.

இ) கடற்தொழில் பிரிவுக்கென தனியான கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் நியமித்தல் தொடர்பிலான சாத்தியக்கூற்று அறிக்கை சமர்ப்பித்தல்.

ஈ) கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மீன்பிடி உள்ளீடுகளை நியாயமான விலையில வழங்குவதற்கான நிலையம் அமைத்தலுக்கான திட்ட அறிக்கையும் நிதித் தேவை அறிக்கையும சமர்ப்பித்தல்.

உ) கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள கிராமிய வங்கியில் வைப்பில் இட்டுள்ள பணத்தினை மீளப் பெறுவதில் உள்ள சிக்கல்கள் பற்றி ஆராய்ந்து தீர்வுத் திட்டம் சமர்ப்பித்தல்.

## பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச சங்க நிர்வாகிகளுடனான கலந்துரையாடல்

அ) ஒவ்வொருசங்கமும் தனது எல்லைப் பரப்பில் தேவையான இடத்தில மலசலகூடம் அமைத்தல் தொடர்பான அமைவிடம், மலசலகூட எண்ணிக்கை, பயன்பெறுவோர் தொகை, செலவு விபரங்கள் அடங்கிய அறிக்கை சமர்ப்பித்தல்.

ஆ) பனை அபிவிருத்திச்சபையுடன் கொத்தணிகள் இணைந்து பனை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிக்கான திட்டம் தயாரித்துச் சமர்ப்பித்தல்.

★ உற்பத்திப் பொருட்களின் வகைகள், கொள்வனவு வழிமுறை, கொள்வனவு விலை, மொத்தப் பெறுமதி, கையாளற்கூலி, பொதிசெய்யும் கூலி ஆகிய மேந்தலைச் செலவுகளின் திரட்டினையும் எதிர்பார்க்கும் இலாபம், பயன்பெறும் உற்பத்தியாளர் எண்ணிக்கை, பெயர்ப்பட்டியல் என்பன உள்ளடக்கியதாக இத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(3-ம்பக்கம் பார்க்க)

"ஒற்றுமையே பலம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் -

# மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சபை

கூட்டுறவு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த உயர்சபைகளாக முன்னர் விளங்கிய தேசிய கூட்டுறவு சபைகள் மாவட்டரீதியாக மாவட்ட கூட்டுறவுசபைகளாக மாற்றப் பட்டன. இம்மாற்றத்தின் விளைவாக மன்னார் மாவட்ட கூட்டுறவுசபை முதன்முதலாக இலங்கையில் 1989-ல் பதிவு செய்யப்பட்டது. இப்பதிவினை முன்னின்று மேற்கொண்டவர் அப்போதைய மாவட்ட கூட்டுறவுசபை செயலாளர் திரு பொன். சண்முகசுந்தரம் ஆவார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள, 6 பல நோ. கூ. சங்கங்களும் - மன்னார், மாந்தை மேற்கு, மாந்தைவடக்கு, மாந்தைதெற்கு, நானாட்டான், முதலிய பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள், - ஐந்து பனை தென்னை வள அ. கூ. சங்கங்களும், - ஆட்காட்டிவெளி, உயிலங்குளம், நானாட்டான். மன்னார், தலைமன்னார், ப, தெ. வ. அ. கூட்டுறவுச்சங்கங்கள், 90- க்கு மேற்பட்ட சி. க. கூ. சங்கங்களும் அவற்றின், சமாசம் ஒன்றும், 40-க்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர் கூ. சங்கங்களும், அவற்றின் சமாசமும். உழவுயந்திர கூ. சங்கங்களும், இச்சபையில் அங்கத்துவம் பெற்று இணைந்துள்ளன. இவற்றுக்கான பல்வேறு சேவைகளையும், உதவிகளையும், இச்சபை செய்து வந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ அனர்த்தங்களினால், மக்கள், இடம்பெயர்ந்துள்ள நிலையில் கூட்டுறவு நிறுவனங்கள் பாதிப்படைந்துள்ளமையால் இச்சபையின் அனைத்து, சொத்துக்களும் அழிக்கப்பட்ட நிலையில் அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இந்நிலையில் மன்னார் மாவட்ட தமிழீழநிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. எஸ். சின்னப்பா ஆசிரியர், மன்னார் மாவட்ட கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் திரு. வ. செம்மலை, மாவட்ட கூட்டுறவு சபைத்தலைவர் திரு. செ. மரியாம்பிள்ளை ஆகியோரது அயராத முயற்சியினால் மீண்டும் 19. 3. 95 முதல் இச்சபை தனது செயற்பாட்டை முருங்கனில் ஆரம்பித்துள்ளது பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் முருங்கனில் இயங்க ஆரம்பித்துள்ள மன்னார் மாவட்ட கூட்டுறவு சபை மீண்டும் தனது வழமையான பழைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலையைஆரம்பித்து கூட்டுறவுப் பணியாளர் சாதாரண பயிற்சி நெறியை நடாத்த உள்ளது. இதனைத் தொடர்ந்து கூட்டுறவு நிறுவனங்களில் மகளிர் செயற்பாடுகள் ஆரம்பித்தல், பல்வேறு வகைப்பட்ட கல்வி, கருத்தரங்குகள் நடாத்துவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப் படவுள்ளன.

ஜே. கே. பயஸ் —
செயலாளர், மாவ கூட்டுறவுச் சபை மன்னார்.

சென்ற இதழ் தொடர்ச்சி

## துணைவிதி 22 : கிளைக்குழுக்கள்

25. பின்வரும் செய் கடமைகளை ஒரு கிளைக் குழு ஆற்றுதல் வேண்டும்.

அ) அக்கிளையின் உறுப்பினர்களின் நலவுரிமைகளைப் பேணும்பொருட்டு விழிப்புக் குழுவாய் கடமையாற்றுதல்.

ஆ) கிளையோடுதாம் கொண்டுள்ள தொடர்புகள் பற்றி உறுபபினர்கள் முறைப்பாடுகள் செய்தால் அவற்றினைப் பெற்று விசாரணை செய்து தேவையேற்படின் கிளைமுகாமையாளர், பொதுமுகாமையாளர் அல்லது நெறியாளர் குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

இ) கிளை முகாமையாளரின் வேலையை மேற்பார்வை செய்தல்.

ஈ) தேவை ஏற்படும்போது கிளை முகாமையாளருக்கு, அலலது நெறியாளர் குழுவிற்கு ஆலோசனைகளை வழங்குதல்.

உ) சங்கத்தின் நிருவாகிகளால் தமது கவனததிற்கு விடப்படும உறுப்பினர் கடன் விண்ணப்பம் பற்றி அந்நிருவாகிகளுக்கு தகவல்களைக கொடுததுதவுவதோடு அவ் விண்ணப்பங்கள் பறறி தகவுரை செய்தல். அக்கிளையின் உறுப்பினர்களிடமிருந்து கடன்களை அறவிடுவதற்கும், நெறியாளர்குழுவினால் உதவி கோரப்படும் வேறு எவ்விடயததிலும் நெறியாளர் குழுவிற்கு ஆலோசனை வழங்கி உதவ செய்தல்.

ஊ) நெறியாளர் குழுவினால் அல்லது சங்கத்தன் பொது முகாமையாளரால் கிளைக் குழுவிற்கு குறிப்பாக விடப்படும் எல்லா விடயங்கள் பற்றித் தனது கருத்துக்களையும் தகவுரைகளையும் வெளியிடுதல்.

எ) உறுப்பினர் கல்விக்கான திட்டங்களை வகுத்துச்செயல் படுத்துவதோடு நெறியாளர் குழுவினால் தமக்குப் பொறுப்பளிக்கப்படும் வேறு எந்தக் கடமைகளையும் நிறைவேற்றுதல்.

ஏ) உறுப்பினர் அனுமதியை ஆராய்தல்.

ஐ) இவ்வுபவிதிகளை மீறும் உறுப்பினர்களைப்பற்றி நெறியாளர் குழுவிற்கு அறிவித்தல்.

ஒ) சங்கத்தின் பொதுச் சபைக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல.

26. கிளைக்குழுக் கூட்டங்கள் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவையாவது நடைபெறல் வேண்டும். தேவை எனக் கருதபபடும் வேறு சமயங்களிலும கூட்டங்களைக் கூட்டுதல வேண்டும்.

27. அழைப்பு விடுக்கப்படும் காலை கிளை முகாமையாளர் கிளைககுழுவின எலலாக் கூட்டங்களுககும சமூகமகொடுத்து கிளையின் விடயங்கள் பறறி கிளைககுழுவிறகுத தேவைப் படும தகவலகளைக் கொடுத்து உதவுதல வேண்டும.

28. கிளைக்குழுவின் கூட்டங்களைக கிளைககுழுத தலைவரோ, கிளைககுழு உறுப்பினர்களின் பெருமபானமையினரோ, சங்கத்தன் தலைவரோ, அலலது ஆணையாளரோ, அலலது இதற்கென ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரோ அழைக்கலாம்.

29. ஒரு கிளைக்குழுவின் எந்தக் கூட்டத்திலும் எவ்விடயத்தைப் பற்றியும் முடிவு எடுப்பதற்கு ஆகக் குறைந்தது ஐந்து உறுப்பினர்களாவது சமூகங்கொடுத்திருத்தல்வேண்டும் கிளைக்குழுத் தலைவரோ அல்லது அவர் சமூகமளிக்காதவிடத்து அக்குழுவின் உப தலைவரோ அல்லது இருவரும் சமூகமளிக்காதவிடத்து பொது ஒப்புதலின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அக்குழுவின் எந்த உறுப்பினரோ அக்குழுவின் எந்தக் கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்குரிமையே இருக்கும். வாக்குகள் சமமாக இருக்குமிடத்து கூட்டத்தலைவருக்கு அறுதியிடும் வாக்கு இருக்கும்.

30. கூட்டத்தில் விவாதிக்கப்படும் அல்லது முடிவு செய்யப்படும் எல்லா விடயங்களும் கூட்டக் குறிப்பேட்டில் பதிவு செய்யப்படல் வேண்டும். கூட்ட முடிவில் கூட்டத் தலைவரும் கூட்டத்திற்கு சமூகமளித்த ஏனைய எல்லா உறுப்பினர்களும் கூட்டக் குறிப்பேட்டில் கையொப்பமிடல் வேண்டும்.

31. ஒவ்வொரு கிளைக்குழுச் செயலாளரும் அக்கிளைக்குழுவின் கடிதத் தொடர்புகளைக் கவனிப்பதோடு கிளைக்குழுக் கூட்டங்களுக்கும் கிளை பொதுக் கூட்டங்களுக்கும் சமூகமளித்து அத்தகைய எல்லாக் கூட்டங்களில் கூட்டக் குறிப்புக்களை உரிய கூட்டக் குறிபபேடுகளில் பதிவு செய்தல் வேண்டும். இத்தகைய எல்லாக் கூட்டக் குறிபபுகளின் ஒரு பிரதியைச் சங்கத்தின் நெறியாளர் குழுவிற்கு அவர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

32 ஒவ்வொருகிளைக்குழுவிலும் ஏற்படும் வெற்றிடங்களுக்கு அக்கிளையின் உறுபபினர் பதிவேட்டில் பதிவு செய்யப் பட்டிருக்கும் ஏனைய உறுப்பினர்களை ஒத்துத் தேர்ந்தெடுப்பதற்கு ஒவ்வொரு கிளைக்குழுவிற்கும் அதிகாரம் இருக்கும். ஆனால் அக்கிளைக் குழுவின் உறுப்பினர்களிடையே ஏதாவது வெறறிடம் இருப்பதனால் அல்லது அக்கிளைக் குழுவிற்கு எந்த உறுப்பினரையாவது தெரிவு செய்தலில் அல்லது நியமித்தலில் குறைபாடு இருப்பதால் அக்காரணத்தின் நிமித்தம் அக்கிளைக்குழுவின் எந்தச் செயலோ நடவடிக்கையோ செல்லுபடியாகாதது ஆகிவிடாது.

( முற்றும் )

## சகல நியமனங்களுக்கும் ஆணைக் குழுவின் முன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் !

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் செயலளர் திரு. ஆ. சுப்பிரமணியசர்மா "கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு விதிகள்" என்னும் தலைப்பிலான 20,95 ம் இலக்க சுற்று நிருபம் ஒன்றை 24 4-95-ல் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சகலகூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடபபட்டுளளதாவது;

கூட்டுறவுஊழியர்கள் ஆணைக் குழுவினால் ஆக்கபபடடு 1981 டிசமபர்முதலாம் திகதிய 169/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியிலும் 1982 நவமபர் 11 ஆம் திகதிய 218/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலும் வெளியிடபபட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு விதிகளில் சில 1994 டிசம்பர் 13 ஆம் திகதிய 849/07 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்டுளளன. இத் திருத்தங்களை கவனத்திற் கெடுக்குமாறு வேண்டப்படுகிறது.

2) குறிப்பாக விதி 18 இன் திருத்தத்தைக் கவனததிற் கெடுக்கவும். மேற்கூறப்படட வர்த்தமானியில் தமிழில் இவ் விதியின் திருத்தம் பிழையாக அச்சிடப்பட்டுள்ளது. எனவே இத்திருத்தம் பற்றி ஆங்கிலப் பிரசுரத்தையோ அல்லது சிங்களப் பிரசுரத்தையோ கவனிக்கவும். சங்கத்தினால் செய்யப்படும் எநதவொரு நியமனமும் இதற்கென நியமிக்கப் பட்ட ஒரு தெரிவுககுழுவின் விதப்புரைகளை கவனத்திற் கெடுதத பின்பே செய்யப்படல வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்படுமுன் தகமைகளையும் மற்றைய சம்பந்தப்பட்ட விபரங்களையும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு அனுப்பி ஆணைக்குழுவின் முன் அங்கிகாரம பெறபபடல் வேண்டும். இது ஒரு முக்கிய திருத்தமாகும். ஆனால் தமிழ் பிரசுரத்தில் இது தெளிவாக எடுத்துக் கூறப்படவில்லை.

3) அடுத்தபடியாக விதி 31 திருத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட விதி 31 இன் படி சேவையிலிருந்து ராஜினாமச் செய்த ஊழியர் ஒருவர், ராஜினாமாச் செய்ய முன்பு சேவையிலிருந்த நன்மைகளுக்கு உருத்தாகிறார். ஆனால் அவர் கூட்டுறவுச் சங்கத்தில் வேறேதேனும் பதவிக்கு பின்னர் மீளவும நியமிக்கபபட்டால் அவ்வகையான நன்மைகளிற்கு உரித்துடையவராகமாட்டார்.

4) விதி 32 திருத்தப்பட்டுள்ளது 60 வயதிற்கு மேற்பட்ட எவரையும் சேவையில் வைத்திருத்தலாகாது.

5) விதி 34 உடன் 34 அ. சேர்க்கப்பட்டுள்ளது. இதன் படி பதவியை வெறிதாக்கியுள்ள ஒரு ஊழியர் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செயயலாம் ஆணைக்குழுவின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதும் ஆகும்.

6) விதி 79 திருத்தப்பட்டுள்ளது. இதன்படி ஒரு சங்கஊழியர் ஒழுககாற்று கட்டளைகளிலிருந்து எழும் மேன்முறையீட்டினை தொழில் நியாய சபைக்கும் சமர்ப்பிக்கலாம்.

7) விதி 135 திருத்தப்பட்டுள்ளது. இதன்படி ஒழுக்காற்று கட்டளைகளிற் கெதிராக ஒரு ஊழியரோ அல்லது அவரின் பெயரில் தொழிற் சங்கமோ ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யலாம்.

8) விதி 139வும்திருத்தப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றையும் கவனத்திற் கெடுத்தொழுகுமாறு எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

2 - பக்கத் தொடர்ச்சி ...

இ) சாற்று உற்பத்தியாளர்களின் உபகரணங்கள், உற்பதி செய்வதற்கான உற்பதி நிலையம் அமைததல் நவீன வசதிகளுடனான உபகரண உறபததிகளை மேற்கொள்வதறகான திட்டமும செலவு விபரம் உள்ளடங்கிய நிதித் தேவை அறிக்கையும சமர்ப்பித்தல்.

ஈ) அங்கத்தவரின் தேவைக்கேற்ப குறைந்த வட்டியில் நிதவசதிகளை வழங்குவதற்கான கூட்டு அமைப்பிற்கான திட்டம் தயாரித்து சமர்ப்பித்தல்.

கிராமிய வங்கி முகாமையாளர் கூட்டம்

அ) கிராமிய வங்கிகள்மக்கள் வங்கிகளில் வைப்பிலிட்டுள்ள நிதிகளை ஒருங்கிணைத்து பயனபடுத்துவதற்கான திட்டம் தயாரித்து சமர்ப்பித்தல்.

ஆ) கடன், சேமம் தொடர்பான துரித நடைமுறைத் திட்டம் தயாரித்துச்சமர்ப்பித்தல்.

இ) மேலதிக நிதிகளை ஆக்க பூர்வமான முதலீடுகளில் இடுவது தொடர்பான முன் மொழிவுகள்.

கல்வி உத்தியோகத்தர், மாவட்டச்சபை பணிப்பாளர் மகளிர் குழு சந்திப்பு

அ) மாகாண மட்ட கூட்டுறவுச் சபை அமைத்தலுக்கான முன்மொழிவுகளுடன் மாதிரித் துணைவிதி தயாரித்துச் சமர்ப்பித்தல்

ஆ) குறுகியகால, சங்கமட்ட, மாவட்ட மட்ட பயிற்சிகள் சான்றிதழ் வழங்கல், பயிற்சிகள் மதசார்பான நடைமுறைகளை வகுத்து மகளிர் குழுச் செயற்பாட்டினை ஊக்குவித்தல்.

இ) கல்வி அலுவலர்களுக்கான கடமை வரைவு தயாரித்து பயிற்சி அளிப்பதற்கான செயற் திட்டம் தயாரித்தல்

ஈ) கற்கை உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கானதும் அதனூடாக கல்வி வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தலுக்கான செயல்முறைத் திட்டம் தயாரித்தல்.

உ) கல்வி அலுவலரை முகாமைத் தரத்திற்கு தரமுயர்த்தலுக்கான படிமுறைத் தேர்ச்சி அறிக்கை சமர்ப்பித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுமாறும் நெஞ்சங்கள் - 7

கே. எஸ். ஆனந்தன்

கதிரவன் வரவுக்காக கீழ் வானில் ஆரார்த்தி கரைத்திருந்தது. போர்க்காலச் சூழ்நிலையாதலால் தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன. இடைக்கிடையே போராளிகளின் வாகனங்கள் உறுமிக்கொண்டு செல்லும் சப்தத்தை தவிர வேறுவாகனங்கள் எதுவும் போவதில்லை. கல்லூரி, அலுவலக நாட்களாயின் தெருக்களை அடைத்துக்கொண்டு எதிரும் புதிருமாக துவிச்சக்கரவண்டிகள் சென்றுகொண்டிருக்கும்.

"நாள் என் செயும், வினை தான் என் செயும் எனை நாடி வந்த கோள் என் செயும், கொடுங்கூற்று என் செயும், குமரேசர் இருதாழும் ... ..." என்ற அருணகிரிநாதரின் அலங்காரத்தினை பாடி முடித்துவிட்டு விபூதி நிறைந்த நெற்றியுடன் பூசை அறையை விட்டு வெளியே வந்தார்.

மதுரா இன்னும் நித்திரை விட்டு எழவில்லை. வேலைக்காரப் பெண் எவர்சில்வர் டம்ளரில் ஆவிபறக்கும் கோப்பியை அவர் முன் வைத்துவிட்டுச் சென்றாள். "முருகா" என்று கூறியவாறு கோப்பியை எடுத்துப் பருகினார் சூடான கோப்பி உள்ளே சென்றதும் அவருடைய சிந்தனை முதல் நாள் ரவிசங்கர் வீட்டில் நடைபெற்ற சம்பாஷணையை நினைவுத்திரைக்கு இழுத்து வந்தது.

குடும்பம் - வாழ்க்கை என்பது எவ்வளவு மகிழ்ச்சிகரமானது என்று ரவிசங்கர் குடும்பத்தைப் பார்த்த போதே உணர்ந்து கொண்டார் சுந்தரேசன். தாய், தந்தை, பிள்ளை என்று உறவு முறையில் பந்தத் தொடர்புளிருந்தாலும் ஒத்த கருத்தில்லாத உறவு முறைகளுடன் வாழும் பல குடும்பங்கள் அவர் நினைவில் நிழலாடின. பணத்தேடல் ஒன்றே குறிக்கோளாயிருந்து அதன் மூலம் பந்தத் தொடர்புகள் அற்றுப்போன தன் வாழ்வை நினைத்தபோது இதுவும் ஒரு வாழ்வா என்று எண்ணத் தோன்றியது ஒருவர்க் கொருவர் தம் வாழ்வின் சுகதுக்கங்களை தியாகம் செய்து கொண்டு பாசப்பிணைப்பில் ஆனந்தம் கொள்ளும் அவர்களுடைய மகிழ்ச்சிகரமான குடும்பத்தை தன் மகள் போய் சிதறடித்து விடுவாளோ என்று அல்லது அந்தப்பிணைப்பில் ஆழ்ந்து ஒன்றித்து வாழ்வாளோ என்று நிர்ணயித்து நிட்சயிக்க முடியாத நிலையில் மனம் தடுமாறிக் கொண்டிருந்தார்.

பெற்றோர் பிள்ளைகளை நினைத்து அவர்களது எதிர்காலம் குறித்து கவலைப்படுமளவுக்கு பிள்ளைகள் தமது குடும்பநிலைமை குறித்துச் சிந்திக்கும் ஆற்றல் சமூகத்தில் குறைந்து விட்டதாக நினைத்தார் சுந்தரேசன். மேலைத்தேசக்கல்வி முறையும் மேலைத்தேச நாகரீகமும் எமது சமூக அமைப்பில் வேரோடிவிட்டதன் விளைவுதான் இதற்குக் காரணமாயிருக்குமா? ஐந்தறிவுப் பிராணிகள் போன்ற மேலைத்தேசங்களில் பெற்றோர் - பிள்ளைகள் குடும்ப உறவு இருக்கின்றதே! இதுதான் இயற்கையின் நியதியோ? நாம் தான் குடும்பம் பிள்ளை குட்டி என்று கூட்டுப் பாட்டுக்குள் பந்தபற்றுக்களால் உழல்கிறோமா? என்று நினைத்து தடுமாறியவர் ஏதோ அவன் விட்டவழி என்று இறைவனிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு தன் அன்றாடக் கடமைகளில் மூழ்கினார்.

திருமணம் நிட்சயமான நாட் தொடக்கம் மதுரா தன்னிலை மறந்த ஆனந்த நினைவுகளில் மூழ்கினாள். எதிர்காலத் திட்டங்களை மனதில் அலசிப்போட்டாள். அவளுடைய திட்டங்கள் யாவும் தன்னுடைய சுயநலத்தின்பட்டதாகவே பெரும்பாலுமமைந்திருந்தன.

போர்ச் சூழல் நிறைந்துள்ள யாழ்ப்பாணத்தை விட்டு கொழும்பில் சென்று வாழ வேண்டும் என்பது அவளுடைய முதல் திட்டம். ரவிசங்கரை கொழும்புக்கு மாற்றல் வாங்கச்செய்து அங்கே தனிக்குடித்தனம் நடத்துவது என்று தன் மனம்போன போக்கில் எல்லாம் கனவுகாண ஆரம்பித்து விட்டாள். ஆனாலும் உடனடியாக வெளியில் எதையும் சொல்லவில்லை.

அதே சமயம் கோமதியம்மாள் தன் வீட்டுக்கு வரப்போகும் பெரிய இடத்துப் பெண்ணைப்பற்றி மனம் பூரித்துப் போயிருந்தாள் எவ்வளவு செய்தாலும் தன் பிள்ளை ரவிசங்கருடைய நல்ல குணத்துக்கு ஏற்ற ஓர் பெண் சகல சௌபாக்கியங்களுடன் வரப்போவதைஎண்ணிப்பெருமைப்பட்டாள். புருஷனை இழந்த பெண் வளர்க்கும் பிள்ளைகளை சிலர் கைம்பெண்டாட்டி வளர்த்த கழுதைகள் என்று பழிப்புக்கிடமாக கூறுவதுண்டு அப்படியில்லாமல் தன் பிள்ளை ஊரும், உலகும் போற்றும் உத்தமனாய் வளர்ந்தபடியால் அவனைத்தேடிவந்த பெருவாழ்வு என்றுதான் அந்த தாய் உள்ளம் மகிழ்ந்தது. நாம் நினைத்தபடி எல்லாம் நடந்து விட்டால் தெய்வம் எங்கே என்ற கேள்விக்கல்லவா விடை கிடைக்காது போய் விடும்.

மனித வாழ்க்கை என்ற பரிமாண விழுமியங்கள் அவள் வகுத்த விதிகக்கோட்டைவிட்டு விலகிப்போய் விடுவதில்லையே. அந்த மாயவலையின் தோற்றத்தினை அறிந்துகொள்ளாத மனித மனங்கள் தம்போக்கில் கற்பனைக்கனவுகளில் லயித்தில் புறப்புறம் பின்னுகின்ற நிலையைத் தானே நாம சமுதாயத்தில் காண்கின்றோம்.

வாலிப வயதில் சலனங்கள் எதுவுமில்லை இல்லை ரவிசங்கர். அவனுடைய மிடுக்கான தோற்றமே இளம் பெண்கள் உள்ளத்தில் சலனத்தைத் தோற்றுவிக்கும் தன்மை கொண்டது. இளமையில் வறுமை, தாயின் துன்பம், தன் குடும்பச்சுமை இவையாவும் அவன் மனதில் ஓர் இலட்சிய வெறியைத் தோற்றுவித்து விட்டதால் படிப்பு, பதவி முன்னேற்றம் என்பவற்றிலேயே அவன் சிந்தனை லயித்திருந்தது. வாலிப வயதில் வறட்டு வேதாந்தம் பேசும் ஒருவனாகவே அவனை அவன் நண்பர்கள் கேலிசெய்வதுண்டு. அவனுடைய அலுவலகத்தில் எத்தனையோ இளம் பெண்கள் வேலை செய்த போதும் அவர்களைப்பற்றி தவறான சிந்தனையே அவனிடம் தோன்றுவதில்லை. கடமையில் கவனமாயிருந்தானே யன்றி தன்னுடைய சுகபோக வாழ்வு பற்றிச் சிந்திக்காதவனாகவேயிருந்தான்.

மதுராவை சந்தித்தபோதும் கூட அவன் மனதில் அத்தகைய எண்ணங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. படித்தபெண், பண்பான குடும்பத்துப் பெண்ணாகவும் இருப்பதால் எல்லோருடைய விருப்புக்களுக்குமிணங்க ஒத்துக்கொண்டான். முக்கியமாக அம்மா கோமதியம்மாளின் விருப்பமே அவன் விருப்பமாயிருந்ததால் மதுராவைத் திருமணம்செய்ய ஒப்புதல் அளித்திருந்தான்.

மதுராவின் அழகுத்தோற்றம். காதளவோடிய கருவிழிகள். நீண்டகருங்கூந்தல், வட்ட முகத்தில் குழிவிழும் கன்னங்கள். பிறரை வசீகரிக்கும் அழகிய புன்னகை பணக்கார வீட்டுப் பெண் என்பதால் ஒரு வித கர்வம் நிறைந்த பேச்சு.

இவையாவும் அவனைக்கவர்ந்திருந்தாலும் நாளாந்தம் பழகப் பழக அவளிடம் அவனுக்குப் பிடிக்காத சில குண விசேடங்களுமிருப்பதை ஓரளவுக்கு உணரத் தலைப்பட்டான்.

திருமணம் என்பது ஆணுக்குப் பெண் அடிமை என்று சிலர் கூறுவதுண்டு. ரவிசங்கரைப் பொறுத்த வரையில் பெண் அடிமை என்ற சொல்லையே வெறுப்பவன் அவனைப் பெற்றவளும் ஓர் பெண்தானே - அவளை அடிமை என்று கூற முடியுமா? அது போன்று தாய்க்குப்பின் தாரமாயிருப்பவளை அடிமைப்படுத்தும் நோக்கம் ஆண்களுக்கு வரலாமா? என்று நினைப்பவன். உடலால் வேறுபட்டாலும் உள்ளத்தால் ஒத்த கருத்துடனும், ஒருமைப்பாட்டுடனும் வாழ்ந்தால் ஆண்டான் அடிமை என்ற பேச்சுக்கு இடமேது? பொருளாதாரச் சூழ்நிலையே குடும்பங்களுக்கிடையில் இப்படி ஒரு சிக்கலைத் தோற்றுவிப்பதாகக் கருதுபவன் ரவிசங்கர். ஒருவர் நிலையை மற்றவர் புரிந்துணர்ந்துகொண்டு, ஒருவர்க் கொருவர் விட்டுக்கொடுக்கும் ஒருமித்த மனப்பக்குவத்துடன் வாழ்ந்து விட்டால் கருத்துவேற்றுமைக்கே இடமில்லாது போய்விடும். ஆனால் பிடிவாதப் போக்கும், தான் நினைத்ததே சரி என்று வாதிடும் இயல்பும் கொண்டவர்களிடையே நல்ல பலன்களை எதிர்பார்க்க முடியாது போய்விடலாம் மதுரா நன்கு நெருங்கிப் பழகியபோது இப்படி ஒரு சூழ்நிலை அவர்களிடையே தலை தூக்க ஆரம்பித்திருந்தது.

ஒருநாள் மாலையில் மதுராவின் வீட்டில் இருவரும் தங்கள் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி சுவாரஸ்யமாக உரையாடிக் கொண்டிருந்தனர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்பினாள் மதுரா.

"உங்களை ஒன்று கேட்பேன். என் விருப்பத்தை நிறைவேற்றுவீர்களா" என்றாள்.

"ஒன்று மட்டும்தான் கேட்பீர்களா?" அதற்கு மேலும் ..." என்று சிரித்தான் ரவிசங்கர்.

"இந்தஆண்களே இப்படித்தான். எதையாவதுகேட்டால குதர்க்கமான பதில். இதுஎனது முதல்கேள்வி இது நிறைவேறினால் பல சந்தோஷமான முடிவுகளை பின்பு கூறுகின்றேன்"

"அப்படியா என்னதான் கேட்கப்போகின்றீர்? கேளும் நியாய பூர்வமானதாயிருந்தால் நிறைவான பதில்கிடைக்கும்.

"நீங்கள் ஏன் வெளியூருக்கு மாற்றம் வாங்கக்கூடாது?"

"நியாயமான கேள்விதான். இன்றைய சூழ்நிலையில் நான் வெளியேப்போவதை விரும்பவில்லை."

"எல்லோரும் நாட்டைவிட்டு வெளிநாட்டுக்கு போகின்றனர். நீங்கள் உள்நாட்டிலேயே மாற்றம் வாங்குவதற்கு ஒரு சாட்டுச் சொல்கின்றீர்கள்"

"மதுரா! நீர் சொல்வது உண்மைதான். நாட்டைவிட்டு வெளியே ஓடுகின்றார்கள். ஏன்? உழைப்புக்காகத் தான் ஓடுகின்றார்கள். இன்று இங்கு நிலவும் சூழ்நிலையை ஒரு சாக்காக வைத்து பணம் தேடப்போகின்றனர் இன்னொரு சாரார் இந்தியா போன்ற இடங்களுக்குக்குப் போய் சுகமாக இருக்கப்போகின்றனர். ஆனால் எங்கே போனாலும் தமிழினத்தின் தலைவிதி அடிமை வாழ்வு தான். ஐரோப்பிய நாடுகளில் பணக்கார அடிமைகள் அகதிகள் இங்கே இந்தச் சூழ்நிலை நிலையிலும் நாம் எப்படி வாழ்கின்றோம். அத்துடன் நாம் பிறந்த மண்ணில் எமது வாழ்க்கை கௌரவமாயிருக்கின்றது. அத்துடன்இன்றைய போர்சூழ்நிலையில் எமது மக்களுக்கு சேவைசெய்யும் ஓர் ஆனந்த உணர்வும் இருக்கின்கின்றது. அந்நிய மண்ணில் அநாதைகளாய் வாழ்வதைவிட நாம் பிறந்த மண்ணில் கௌரவமாய் செத்தாலும் ஓர் கௌரவம் உண்டு. இதை நீர்உணரவில்லையா?" என்று ஓர் நீண்ட பிரசங்கமே செய்தான் ரவிசங்கர்.

அவனுடைய ஒவ்வொரு சொல்லும் தன்மானத்தின் வெளிப்பாடுகளாய் வந்ததைக் கேட்டு மதுரா ஒரு கணம் அயர்ந்து போனாள். ஆனாலும் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற வேட்கையினின்றும் பின்வாங்கினாளில்லை அடிக்குமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும் என்பதை மனதிலிருத்திக் கொண்டு ஆண்களை அடிமையாக்கும் பெண்களின் அஸ்திரப் பிரயோகங்களைப் பாவித்தாகுதல் அவனைத் தன் வழிக்குக் கொண்டுவரல்வேண்டும் என்று தீர்மானித்தவளாய் சிரித்து மழுப்பினாள்.

"என்ன மதுரா நான் சொன்னதைக் கேட்டுவிட்டு சிரிக்கின்றீரே தவிர பதில் ஏதும் கூறவில்லையே"

"நீங்கள் கூறுவதை நான் உணராமலில்லை சங்கர். ஆனால் ... என்று இழுத்து நிறுத்தினாள்.

"நீங்கள் கோபப்படாமலிருந்தால் கூறுகின்றேன்."

"கோபமா? எனக்கா?" என்று சிரித்தவன் "மதுரா நீர் என்னை முழுமையாய் புரிந்துகொள்ளவில்லை என்றே நினைக்கிறேன். நீர் வாழ்ந்த வளர்ந்த சூழ்நிலைக்கும் நான் வாழ்ந்த வளர்ந்த சூழ்நிலைக்கும் நிறைந்தவேறுபாடுண்டு. தாயன்பு என்ன என்று தெரியாது வளர்ந்த உம்மிடம் நான் நிட்சயமாக கோபிக்கப்போவதில்லை. ஆனால் நீர் படித்தபெண். உண்மை நிலையை தெரிந்து கொண்டு அதனை பகுத்தறியக்கூடிய ஆற்றல் உமக்கு நிட்சயமாக உண்டு. அதன்வழியில் நடப்பீர் என்று எதிர்பார்க்கின்றேன்.

"ஷ்சுயர். அதேபோல என் மனநிலையை உணர்ந்து நீங்களும் சில விடயங்களில் எனக்கு ஒத்துழைப்பு தரவேண்டுமென நான் எதிர்பார்ப்பது தவறில்லையே"

"நியாயபூர்வமான எதற்கும் நான் நிட்சயம் ஒத்துழைப்பு தருவேன் மதுரா"

"அதுபோதும் சங்கர்" என்று அவன் கரங்களை ஆவலுடன் பற்றி தன் கன்னத்துடன் அணைத்துக்கொண்டாள்.

பெரும்பாலான ஆண்கள், புத்திசாதுரியமானவர்கள் கூட பெண்மையின் விழுமியங்களில் புத்திபேதலித்துப்போவதுண்டு. புராணகால வரலாறுகள் கூட இந்த நியதிக்கு விதி விலக்குக்குட்பட்டதல்ல. இவற்றை நன்கு படித்து உணர்ந்தமதுராஎப்படியுமரவிசங்கரை தன்வலையில்வீழ்த்திவிடலாம் என்று திடமாக நம்பினாள். ஆனால் ... ...?

(வளரும்)

மருத்துவம்

## பலாப் பழம்

உலகில் உள்ள பழவகைகளில் உருவத்தில் மிகப்பெரியதாக இருப்பது பலாப்பழம் தான்.

இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட பலா தற்போது பர்மா இலங்கை, மலேசியா, பிரேசில்போன்ற நாடுகளிலும் வளர்க்கப்படுகின்றது. சிங்கப்பூர்பலாஇலங்கைப்பலா ஆகிய இனங்கள் புகழ்பெற்றவை மட்டுமல்லாமல் ருசியான பழங்களையும் தருவனவாகும், பலாவில் 100 இனங்கள் வரை உள்ளன.

100 கிராம் பலாச்சுளைகளில் 18.9% மாச்சத்து, 2% புரட்டின் 1% கொழுப்பு, 0.8% கனியச்சத்தும், உள்ளன. அந்துடன் "ஏ" வைட்டமின் அதிகமாகவும், "சி" வைட்டமின் சிறிதளவு பலாப் பழத்தில் உண்டு.

பலாச்சுளைகளை தேனில் தொட்டு அளவுடன் சாப்பிடுவதால் நரம்புகளுக்கு புத்துணர்ச்சியும இரத்தவிருத்தியும ஏற்படும. அத்துடன எளிதில் ஜீரணிக்கவும செய்யும. தேன் சேர்க்காமல் சாப்பிட்டால இந்தநன்மைகள் ஏற்படமாட்டாது.

சிறுநீரை நன்கு கழிக்கவும், உயிரணுக்களை வளர்க்கவும், பலாப்பழம உதவுகிறது, மூளை நரம்புகள் நன்கு பலமாகவும், கண்பார்வை நன்கு கூர்மையாக தெரியவும அளவுடன பலாப்பழம சாப்பிட வேண்டும். பலாப்பழத்தைப் பெரும்பாலும் உணவுக்குப்பின சாப்பிடுவது நல்லது. இது குளிர்ச்சியான பழமாதலால வாத, சர்க்கரை நோயுள்ளவர்கள் தவிர மற்றவர்கள் அளவுடன சாப்பிட்டால் நன்மைகள் உண்டு.

## புழுங்கல் அரிசி

பச்சரிசியிலும் பார்க்க புழுங்கல் அரிசியில தான் பல முக்கிய தாது உப்புக்கள் உண்டு. குறிப்பாக புழுங்கல் அரிசியிலுள்ள செலினியம் (Selenium) எனனும் பொருள் புற்றுநோய் மற்றும் பலவிதமான இதய நோய்கள், முடக்குவாதம் போன்ற பல்வேறு வகையான நோய்களுக்கெதிரான பாதுகாப்பை அளிக்க உதவும் முக்கிய தாதுஉப்புக்களில் ஒன்று என அண்மைய வைத்திய ஆராச்சி உறுதிப்படுத்துகிறது. அத்துடன் பச்சரிசியை விட புழுங்கல் அரிசியில் 1½ மடங்கு புரதமும் 4 மடங்கு விற்றமினும் உள்ளது.

நீங்கள நின்று கொண்டு வேலை செய்கிறீர்களா.?

அப்படியானால், வேலை செய்யும்போது இரண்டு கால்களையும் ஒன்றுபோலவைத்து நிற்காமல் ஒரு காலை விரைப்பாகவும், மறறக்காலை சிறிது தளர்வாக மடக்கியும்வைத்து நில்லுங்கள். இடையிடையே காலை மாற்றி வைத்து நில்லுங்கள். இடையிடையே சிறிது தூரம் நடவுங்கள். ஒரு முறை, அல்லது இருமுறையாவது கால்கள் இரண்டையும் இடுப்பைவிடஉயரமான நிலையில் தூக்கி வைத்துக்கொண்டோ அல்லது படுத்திக்கொண்டோ இருங்கள். நின்றுவேலை செய்யும் சிரமம் தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுக் கல்வியின் அவசியம்

கூட்டுறவு ஓர் சமூக பொருளாதார அமைப்பாகும். 'இவ்வமைப்பின் நெறிப்படுத்தலுக்கும் வெற்றிக்கும் கூட்டுறவுக்கல்வி அத்தியாவசியமானது என்பதனைக் கூட்டுறவாளர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்தவர்களுக்கும் அங்கு கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் கல்வி அவசியம் என்பது புதிய வற்புறுத்தல அலல. றொச்டேல முன்னோடிகள் (Rcchdale-Pioneers) தங்களின் வெற்றிகரமான முதல் கூட்டுறவு நிறுவனத்தைத் தொடக்கிய போதே தாங்கள் வகுத்த கூட்டுறவுக் கொள்கைகளில் கூட்டுறவுக் கல்வியையும் ஒன்றாகச் சேர்த்திருந்தனர்.

ஒவ்வொரு உறுப்பினரும் கூட்டுறவின் அடிப்படைகளைப் பற்றியும், அவர்களின உரிமை, பொறுப்புக்களைப் பற்றியும் கூட்டுறவு இயங்குவதைப்பற்றியும அறிந்திட வேண்டும. கூட்டுறவு ஊழியர்கள் மேற்கூறியவைகளைக் கையாண்டு கூட்டுறவு நிறுவனங்கள் இயங்கும் விதம பற்றியும், நிர்வாகம் பற்றி அறிந்திடவேண்டும். வருங்கால உறுப்பினர்களுக்கு கூட்டுறவு பற்றிய ஒரு நல்ல எண்ணத்தை ஏற்படுத்திப் பின்னர் அவர்கள் சிறந்த கூட்டுறவாளர்களாகவும், நல்ல குடிமக்களாகவும் திகழக் கூட்டுறவுக்கல்வி பயன்பட வேண்டும்.

1966-ம் ஆண்டில் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு அமைய மகாநாட்டில் D. U. கண்வே தலைமையிலான கொள்கை நிர்ணயக் குழு சமர்ப்பித்த அறிக்கையிற கூட்டுறவு ஆயக்கம் தொடர்ந்து உயிர்வாழ்வதென்றால் கூட்டுறவுக் கல்வி மிகவும் இன்றியமையாதது என்று வற்புறுத்தப்பட்டிருந்தது. இதனால்தான் 1966-ல சர்வதேச கூட்டுறவு அமையத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட ஆறு கூட்டுறவுக் கொள்கைகளில் கூட்டுறவுக் கல்விக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுறவு நிறுவனங்கள் வியாபார நிறுவனங்களாகவும் செயல்படவேண்டும். ஆகவே இதன் தனித்தன்மையை உறுப்பினர்களும், அதிகாரிகளும், ஊழியாகளும் உணர்ந்து செயற்படுவதற்கு கூட்டுறவுக் கல்வி அவசியம். பேராசிரியர் காட்கில் அவர்களின் கருத்துப்படி கூட்டுறவு நிறுவனங்கள் இரண்டு விதமாகச் செயல்படவேண்டும. ஒன்று அது வியாபார நிறுவனம் மற்றொன்று சமுதாயத் தத்துவங்களையும, சமுதாயத்துக்குப் பணிபுரியும் நோக்கத்தையும் கொண்ட நிறுவனம் ஆகும். எனவே இதை நன்கு உணர உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கூட்டுறவுக் கல்வி அவசியம.

உறுப்பினர்களுக்கு இத்தகைய கல்வி ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுததுகிறது. ஆண்டுப் பொதுக்கூட்டங்களில் தவறுகளைத் திருத்தவும், சுட்டிக்காட்டவும், பயன்படுகிறது. அதனால் கூட்டுறவு இயக்கத்தில் மோசடியும் தனிநபர் ஆதிக்கமும் குறைகிறது.

கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் கூடடுறவுக்கல்வி பல விதங்களில் பயனளிக்கிறது. கூட்டுறவு முன்னேற்றத்துக்கான தடடங்களைத் திட்டவும் அவற்றை நடைமுறைப் படுத்தவும் உதவுகிறது.

இலங்கையில் கூட்டுறவுக் கல்வி விரிவாக்க வேலைகளைத் தேசிய கூட்டுறவுச் சபையும, மாவட்ட மட்டங்களில் மாவட்ட கூட்டுறவுச் சபைகளும் கூட்டுறவுத் திணைககளத்தினதும் கூட்டுறவு முகாமைச் சேவை நிலையத்தினதும் ஒத்துழைப்புடன் மேற்கொண்டு வருகிறது. 1943-ல் ஆரம்பிக்கப்பட்ட பொலகொல்லையிலுள்ள கூட்டுறவுக் கல்லூரி கூட்டுறவு அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும காலத்துக்குக் காலம் பயிற்சிகளை அளித்து வருகிறது.

கூட்டுறவு இயககத்தை நெறிபபடுத்தும் செயல்முறைகளையும கூட்டுறவுச் சங்கம் எவ்வாறுஇயங்குகிறது. அதன் குறிக்கோள்கள யாவை ஏனைய பொருளாதார வர்த்தக முயற்சிகளிலிருந்து அது எவ்வாறு வேறுபடுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சங்கத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரமுடையவர்கள் என்பதையெல்லாம் சங்க உறுப்பினர்கள் அறிந்திருப்பதற்கு கூட்டுறவுக்கல்வி மிகவும் அவசியமானது.

கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களின் முகவர்களாகப் பணியாற்றுவதினால் தமது உறுப்பினர்களின் நலவுரிமைகளைப் பெரும்பாலும பேண முடியாதிருககிறது. ஆயினும் இன்றைய அமைப்பு முறையில் கூட ஒரு கூட்டுறவுச் சங்கம் உறுதயாக முயற்சி எடுத்தால் உறுப்பினர்களுககு உதவுவதோடு கூட்டுறவு நடவடிக்கையால் ஏற்படக்கூடிய அனுகூலங்களை அவர்கள் உணர்வதற்கு வழிகோலலாம். இதற்கு மிக உன்னதமான கல்வி விரிவாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

— து. பிரபாகரன் —
(விரிவுரையாளர் கூட்டுறவுக் பயி. கல்லூரி, யாழ்ப்பாணம்)

## மாணவர் அரங்கு

# தெரிந்து கொள்ளுங்கள் !

★ காலம் தவறாதீர்கள். குறைந்த வேலையானாலும் நேரத்தோடு பூர்த்தி செய்யுங்கள்.

★ வேலையை சுறுசுறுப்புடன் ஆரம்பித்து விடுங்கள்.

★ பதட்டமில்லாமல் வேலையில் கவனம் செலுத்துங்கள்.

★ முகத்தில் கவலைக் குறி இல்லாமல் மகிழ்ச்சியான உற்சாகமான தோற்றத்தோடு இருங்கள்.

★ சக்தியை மற்றவர்களோடு பேசி விரயமாக்காதீர்கள். தேவையின்றி பேசுவதைத் தவிர்க்க முயலுங்கள்.

★ வேலையை சுத்தமாகச் செய்யுங்கள். முழுமையாகச் செய்யுங்கள். திருப்தியாகச் செய்யுங்கள்.

★ தவறு செய்வது மனித சுபாபம் என்று பேசிக்கொண்டிருக்காதீர்கள். மன்னிக்கும் தெய்வ சுபாபம் கொண்டவர்கள் இல்லாமல் போகலாம்.

★ வருகின்றவர்களிடம் இனிமையாகப் பழகுங்கள். அவர்களின் தேவைகளைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்

★ சம்பந்தப்பட்ட எதையும் தீர்க்கமாகப்படிக்காமல் முடிவுக்கு வராதீர்கள்.

★ நீங்கள் வேலை செய்வதை எப்போதும் யாரோ கவனித்துக் கொண்டிருப்பதாக எண்ணியே வேலை செய்யுங்கள். நீங்கள் செய்கின்ற வேலையில் சிறப்பான கவனம் செலுத்த அது உதவியாக இருக்கும்.

### பொது அறிவு

★ நியூயோர்க்கின் ''கிராபண்ட்சேன்ட்ரல் டெர்மினல்'' ரயில் நிலையமே உலகில் மிகப் பெரிய ரயில் நிலையம். பரப்பு 48 ஏக்கர் இரண்டு தண்டவாளங்கள் உடையது. மொத்த ரயில் பாதை 74. நாளொன்றுக்கு 550 ரயில்கள் வந்து செல்கின்றன.

★ அதிக வேக ரயில் பிரான்சின் டி. ஜி. வி. (T. G. V.) ரயில் ஆகும். இது மணிக்கு 515 கி. மீ. வேகம ஓடும்

★ மிகப்பெரிய விமான நிலையம் சவூதி அரேபியாவில் உள்ள மன்னர் காலித் சர்வதேச விமான நிலையம் பரப்பு 862 கி. மீற்றர்.

★ அதி வேக விமானம் 'கான்கார்ட்' சுப்பர் சொனிக் விமானம். இது 1969 ல் முதன்முதலாகப பறந்தபோது மணிக்கு 2 333 கி மீ வேகம்.

### கூடாது

★ நூல் நிலையத்திற்குள் பாம்பை நுழையவிட்டால் கூடப்பரவாயில்லை. நமது பண்பாட்டை, ஒழுக்கத்தை, உணர்வைக் கெடுக்கின்ற நூல்களை நுழையவிடக்கூடாது.

— குன்றக்குடி அடிகளார்

### அனாதை இல்லம்

உலகிலேயே யானைகளுக்காக நடாத்தப்படும் அனாதை இல்லம் இலங்கையில் பின்னவாலா, என்றஇடத்தில் தான் உண்டு மிகநீண்ட காலமாக செயற்பட்டு வரும் இவ்வனாதை இல்லத்தில் தந்தங்களுக்காகக் கொல்லப்படும் யானைகளின் குட்டிகள் ஆதரவற்ற நிலையில் திரியும்போது அக்குட்டிகளை இந்தஇல்லத்திற்குக் கொண்டு வந்து வளர்க்கிறார்களாம்.

செய்து பாருங்களேன்.

# பயறில் இருந்து நூடில்ஸ் ரீ. வீ. பீ !

பயறு மக்கள் மததியில் பிரபல்யமடைந்துள்ள உணவுப் பொருளாக உள்ளது. இதல் 20-25% புரதமும், 1 - 1.3% கொழுபபும், 56 - 64% காபோவைதரேற்றும், குறிப்பிடத்தக்க அளவு விறறமின்களும், தாதுபபொருட்களும் உளளடக்கிய போஷணைப் பொருளாகும்.

இத்தகய பயறில் இருந்து மாப்பொருளையும, புரதத்தையும தனித தனியாகப் பிரிதமதடுதது அவற்றில் இருந்து 'நூடில்ஸ்', ரீ. வீ. பீ. என்பன தயாரிக்கலாம்.

*மாப்பொருளையும, புரதத்தையும் பிரித்தெடுத்தல் :*

பயறில் உள்ள கல், மண போன்றவற்றை எடுத்துத் துப்பரவாககியபின், பயறைக் குற்றி அதன் தோலை அகற்றிய பின் 3 மணித்தியாலங்கள் வரை குளிர்ந்த நீரில் ஊற வைத்தபின் அம்மியில் அல்லது இயந்திர மூலம் நீர் சேர்தது நன்றாக அரைத்துக்கொள்ள வேண்டும். அரைக்கும்போது ஒரு பங்கு பயறுக்கு (நிறை அடிப்படையில்) 3 பங்கு நீர் சேர்க்க வேண்டும். அரைத்த பயறு நீர் கலவையை மெல்லியதுணி ஒன்றின் மூலம் வடித்துக்கொள்ள வேண்டும். இதன்மூலம் கிடைக்கும் சக்கையை மீண்டும் நீரில் கலந்து வடித்துக்கொள்ளவும்.

வடித்துப் பெறப்பட்ட திரவமானது மாப்பொருளையும், புரதத்தையும கொண்டிருக்கும். இதனை 30 நிமடம வரை ஆட்டாமல் அசைக்காமல்வைததிருக்குமபோது மாப்பொருள் அடியில மண்டியாகப் படியும. புரதம் மேலேயுள்ள நீரில் கரைந்து காணப்படும். இதனைக கவனமாக ஊற்றி மாப்பொருளை வேறாக்கி உடனடியாக நூடில்ஸ் தயாரிககப் பயன்படுததலாம். அல்லது வெளியில நன்கு காய வைத்து காற்றுப் புகாத பொலித்தீன் பைகளில் அல்லது ானகளில் சேமித்துவைத்துப் பின்னரும் பயன்படுதத லாம்.

மாப்பொருளில் இருந்து பிரித்தெடுத்த புரதத்தைக் கொண்ட திரவத்தை நன்கு கலக்கி சூடாக்கி நன்குகொதிக்கும்போது சிறிதளவு வினாகிரியை (ஒரு கிலோ பயறுக்கு 3 தேக்கரண்டி) சேர்க்கும் போது புரதம் கட்டியாக மாறும். கட்டியானபுரதத்தை வடித்து வேறாக்கி வெயிலில் காயவைத்து (கபிலநிறமாக வரும்) இவற்றை ஊற வைத்து ரீ. வீ. பீ. போன்று பயன்படுத்தலாம்.

இப்புரதத்தைக் காய வைத்து இடித்து, அல்லது அரைததுத் தூளாக்கி கறிகள், சூப் தயாரிக்கும்போது அவற்றுடன் சேர்தது சுவையையும் அதிகரித்துக்கொள்ளலாம்.

*''நூடில்ஸ்'' தயாரிக்கும் முறை*

ஒரு பங்கு நிறை மாப்பொருளுக்கு 6 பங்கு நிறை நீர் சேர்த்து மாபபொருளை நன்கு கரைத்துக்கொள்ள வேண்டும். இதனை கரண்டி ஒன்றினால் கலக்கியபடி 5 நிமிடம வரை சூடாக்க வேண்டும். அதன் பின் இச்கலவையில் சூடு ஆறுவதற்கு முன்பாக இடியப்ப உரலில் இட்டு நூடில்ஸ் வடிவில் சுத்தமான குளிர்ந்த நீரைக்கொண்டுள்ள பாத்திரத்தில் பிழிந்துகொள்ள வேண்டும். அதன்பின் பாத்திரத்தில் உள்ள நீரை வடிய விட்டு நூடில்ஸ் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு கிலோ பயறு மாப் பொருளில் இருந்து 850கிராம் நூடில்ஸ் தயாரித்துக்கொள்ளலாம்.

— தேவ்'

### இரும்புச் சத்து

| | |
|---|---|
| வல்லாரை | 68 8 மி. கி. |
| கீரைவகை | 22 முதல் 38 மி. கி. வரை |
| இலைகோவா | 12 5 மி. கி. |
| கருவேப்பிலை | 7.0 மி. கி. |
| அகத்தி | 3.9 மி. கி. |




### கொத்தமல்லி - சீரகம்

100 கிறாம் கொத்தமல்லியில் 17. 9 மி கி இரும்பும், 100 கிறாம் சீரகத்தில் 31 மி. கிறாம் இரும்பும் உண்டு. இவற்றை குழந்தை பெற்றவர்கள் அளவோடு உண்பதால் பிரசவத்தின்போது இழந்த குருதியை மீள உற்பத்தி செய்வதற்கு உதவும்.

ஆனால் இவற்றை அதிகமாக சாப்பிட்டு தண்ணீர் குடிப்பதையும் தவிர்ப்பதால் தாய்ப்பால் சுரப்பது குறைந்துவிடும்.

### எள்ளு

எள்ளில் 40 - 57% வரை கொழுப்பு (எண்ணெய்) உண்டு. இதில் உயிர்ச்சத்து 'ஏ'க்கு முன்னோடியான கரோட்டீன் நிறைய உள்ளது.

100 கிறாம் எள்ளில் 20 முதல் 25 கிறாம் புரதமும், 9. மி. கி. இரும்புச் சத்தும் இருக்கிறது.

நாம் கால் நடைகளுக்குக் கொடுக்கும் எள்ளுப் புண்ணாக்கில் 40 முதல் 48 வீதம்வரை புரதம இருக்கிறது. இதை மனிதர் உண்ணத்தகுந்த வகையில் பதப்படுத்தினால் சிறந்த புரத உணவாக அமையும்.

எனவே உங்கள் குழந்தைக்கு இனிப்பு வாங்கிக் கொடுப்பதற்குப் பதிலாக எள்ளு உருண்டை வாங்கிக் கொடுங்கள். அது குழந்தையின் பல்லையும் பாதுகாத்து போஷாக்கையும் கூட்டும்.

சுகமஞ்சரி

### பலாப்பழ வறுவல்

அரைப்பழமுடைய பலாப்பழ சுளைகளை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி கடலமிழ்து (உப்பு) சேர்த்து வெயிலில் காயவைத்து, அவற்றை உருளைக்கிழங்கு வறுவல் போல் வறுத்துச் சாப்பிடலாம்.

பலாப்பழ விதையில் அதிகளவு மாச்சத்து உண்டு. புரதம் 6.6%உம், கொழுப்பு, விற்றமின் பி-1, பி 2 உம் இருப்பதினால் வேகவைத்தோ, சுட்டோ சாப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைவளம் அபிவிருத்தியடைய துறைசார்ந்த கல்வி அவசியம்!

''யாழ். மாவட்டம்முழுமை யாக பனைவளம் செறிந்து காணப்பட்டபோதும் இவற்றைமுழுமையாகப்பயன் படுத்தக்கூடிய வகையில் உற்பத்திகள் மேற்கொள்ளப்பட வில்லை அப்படி [illegible] போதும் இன்றய இந்த நிகழ் வானது அதனைப் போக்கக் கூடிய வகையில் அமைந்திருப் பது நோக்கத்தக்க அம்ச மாகும்''

வலிகாமம் [illegible] வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணி யினால் அமைக்கப்படவுள்ள, பனைவள பல் தொழில் பேட்டையின் ஒரு அங்கமான போத்தல் அடைப்புப் பகுதி யின் கட்டிடத்திற்கான அடிக் கல்லை நாட்டி வைத்துப் பேசிய வடகிழக்கு மகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணை யாளர் திரு சுந்தரம் டிவகலாலா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொத்தணித்தலைவர் திரு. நா. கணேசன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தொடர்ந்து பேசுகையில்;

பனைவளம் தொடர்பான உற்பத்திகள் முழுவளர்ச்சி அடைவதற்கு துறைசார்ந்த கல்வி போதிக்கப்படுவதுடன் பாடசாலைக்கல்வியும்போதிக் கப்பட வேண்டும். பாலர்பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையிலான இத்தகய கல்வி போதிப்பதற்கும் விரிவாக்கத் திற்கும் எனது ஆலோசனையும் ஆதரவும் உண்டு. வலிகாமம் கொத்தணியின் இம் முயற்சி பாராட்டுக்குரியது என்றும் கூறினார்.

கூட்டுறவு அ. கூ. ஆணையாளர் திரு தி. சபாரத்தினம் பேசுகையில், பனைவள உற்பத்திகளை, நவீன யந்திர சாதனங்களைப் பயன்படுத்தி பொருளின்தரம் அளவுபோன்றவற்றை உயர்த்த வேண்டும் என்று கூறி வலிகாமம் கொத்தணிக்குத் தனது பாராட்டு தலைத் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் தமிழீழ நிர்வாக சேவை செயலாளர், கூட்டுறவு உத்தியோகத்தர், அங்கத்துவ சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

கொத்தணியின் பொது முகாமையாளர், திரு க. சந்திரராசா அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரி வித்துப் பேசினார்.

## விசேட பரீட்சைக்கு ஏற்பாடு!

1990க்கு முன்னர் கூட்டுறவுக் கல்லூரியில் பயின்று பரீட்சை எடுத்து நூனசித்தி அடைந்தோரும் சித்திஇன்மை அடைந்தோரும் கூட்டுறவுச் சங்கங்களில் மிகவும் பாதிக்கப் பட்ட நிலையில் தமது பதவி உயர்வுகளை இழந்து, உயர் கல்விகளை இழந்து இருந்த நிலை சுட்டிக் காட்டப்பட்டு இவர்களுக்கு ஒரு விசேட பரீட்சையினை நடாத்த ஆணையாளர் அனுமதி அளித்துள்ளார். இப்பரீட்சை யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு பயிற்சிக்கல்லூரியில 1995 யூலை மாத இறுதவாரத்தில நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களைத் தயார்ப் படுத்துவதற்கான விசேட வகுப்பு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் 1995 யூன் மாதம் 25-ம் திகதி தொடக்கம் யூலை மாதம் 6 - ஆம் திகதி வரை நடைபெறும்.

மேற்படி பயிற்சி வகுப்பில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப பத்திர உயர்பிரிவு, கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவு, முகாமைத்துவம் தொடர்பான உயர்தர தேசிய சான்றிதழ் பாடநெறி, கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பததிர மேற்பார்வை மட்ட சாதாரண பயிற்சி ஆகியவற்றிற்கான விசேட வகுப்புக்கள் நடைபெறும்.

## புதிய கட்டிடம்

பூநகரி பலநோ. கூ. சங்கம் வலைப்பாடு மக்களின் வேண்டுகோளுக்கிணங்க வலைப்பாடு என்னும் இடத்தில் புதிய கிளை விற்பனை நிலையக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இதே வேளை மேற்படி சங்கம் ஜெயபுரத்தில் நல்லெண்ணெ உற்பத்தி நிலையம ஒன்றையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துளளது.

## அரிசி ஆலை

கரைச்சி தெற்கு பல நோ கூ. சஙகம் உருத்திரபுரத்தில் அரிசி ஆலை ஒன்றை அமைபபதற்கு நடவடகைக எடுத்துள்ளது.

## விண்ணப்பம் கோரல

### கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவுபயிறசி நெறி.
### ஆடி 1995 - மார்கழி 1995

1995 ஆடி மாதத்தில் ஆரம்பமாக இருக்கும் மேற்படி பயிறசி நெறிககான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிறசிக் காலம்:- 5½ மாதங்கள்.

தகமைகள் :

கூடடுறவுச் சங்கப் பணியாளர்களிற்கு

1) க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், கணிதம் உடபட 6 பாடங்களில சித்தி அடைநது கூடடுறவுச் சஙகங்களில ஒரு வருடததிற்கு குறையாடல் பணியாறறும பணியாளாகள.

அல்லது

2) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர கனிஷ்ட பரிவுப் பரீட்சையில முதாலாம பிரிவில் சித்திபெற்று ஒரு வருடத்தறகு குறையாமல் பணிபுரியும் நிரந்தரபபணியாளர்கள்.

3) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர கனிஷ்ட பரிவுப் பரீட்சையில் சித்தி பெற்று இரணடு வருடங்கள் கூட்டுறவுச் சங்கஙகளில் பணிபுரியும் நிரந்தரய பெற்ற பணியாளர்கள்.

அல்லது

கூட்டுறவுச் சங்கப் பணியாளர் அல்லாதோர்

1) க. பொ. த. சாதாரண தரப பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் கூடிய இரு தடவைகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றவர்கள்.

அல்லது

2) க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடஙகளில் சிததி பெற்றவர்கள்,

வெற்றிடங்கள் இருக்கும் சந்தர்ப்பத்திலேயே வெளிவாரி மாணவர்கள் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்.

தெரிவு செய்யபபடும் பயிற்சியாளர்கள் கல்லூரியினால் விதிக்கப்படும பயிற்சிக் கட்டணங்களை செலுத்துதல வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை இல, 14, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள கூடடுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ரூபா 10/- செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி : **25 - 06 - 1995**

— அதிபர்

## விசேட பொதுக்கூட்டம்

வேலணை பல நோ. கூ. சங்கத்தின் விசேட பொதுச் சபைக கூட்டம யூன் மாதம 18-ம் திகதி சங்கத தலைமைக் காரியாலய மண்டபத்தில சங்கததலைவர் திரு. பொ. மாசிலாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

## இழப்பீட்டுத் ...

செய்யவதற்கும், தொழில வாயப்பை ஏறபடுத்துக்கொடுக்கவும முடியாத நிலையில உளளன.

எனவே தற்போதய போர்க் காலச் சூழலில தீவகச் சங்கங்களின் செயற்பாட்டுக்கு உரித்தகைய இழப்பீட்டுத் தொகையை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பெற்றுத்தருமாறு அங்கோரிக்கையாக தெரிவித்துள்ளார்.

## யா. மா. கூ. சபை ...

இக் கூட்டத்தில கூ. அ. உ. ஆணையாளர்கள் திருவாளர்கள் தி. சபாரத்தினம, கே. பஞ்சலிங்கம, எஸ். ஜெயபாலன் தமிழீழ நிர்வாக சேவையின் கூட்டுறவு பகுதப் பொறுப்பாளர் திரு. பரணி, புதிய பணிப்பாளர்கள், திரு. வாளர்கள், சொல்மன் சூசிறில் (உபதலைவர்) தி. சுந்தரலிங்கம், ம ஜெயநாதன, ச. முருகனேசன், சா. கந்தசாமி, எஸ். செல்வரத்தினம், மா. புலேந்திரன், கா. பிரேஸ்றஜி, க. அருந்தவபாலன், திருமதி ரதி சோதிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நூல் அறிமுகம்

### சுக மஞ்சரி

சமூக சுகாதார சேவையாளர்களுக்கான காலாண்டு சஞ்சிகை

தை - 1995

பக்கங்கள் - 25

வெளியீடு:

சமுதாய மருத்துவதுறை,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக் கழகம்.

சமூக சுகாதார சேவையில் ஈடுபடுபவர்களுக்கு சுகாதார அறிவை மேம் படுத்துவதற்காக ''பெறுமதி'' மிக்க சஞ்சிகையாக சுகமஞ்சரி வெளி வந்திருப்பது பாரட்டப்பட வேண்டிய அம்சம். பாலூட்டும் தய்மார்களுக்கு தாய்ப் பால் சுரப்பதற்கான அறிவுரை, பாம்புககடி பற்றிய அறிவுரை' காசநோய் குணப் படுத்தக்கூடிய நோய், நோய் தடுப்பு எனபல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் இன்றைய தேவையை உணர்ந்து பிரசுரிக் கப்பட்டுள்ளன.

இச்சஞ்சிகை வெளியீட்டிற்கு ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியம் உதவியிருப்பது பெருமை தரும் விடயமாகும்.

ஐ. எஸ். ஏ.

### வேலணைத் தீவு புலவர்கள் வரலாறு

ஆக்கம்- ''தில்லைச்சிவன்''

வெளியீடு:
வேலணை பல. நோ. கூ. சங்கம்

விலை- 35/-

எம்மண்ணிற் பிறந்து வளர்ந்து வாழ்ந்து உரமாகி விதையாகியோர் அனைவருக் கும் சமர்ப்பணமான இந்நூல் காலத்தின் தேவைகருதி வெளி யிடப்பட்டுள்ளது.

'' வேலணைத்தீவின் புலவர் களின் வரலாறு'' என்று தலைப்பு இடப்பட்டுள்ள போதும் உண்மையில் வரலாற் றுக்கு முன்னோடியான புலவர் களின் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூல் என்றே கொள் ளலாம்.

வேலணை மக்கள் இடம் பெயர்ந்த நிலையிலும், இந் நூல் வேலணை பல நோ. கூ. சங்கத்தினரால் வெளியிடப்பட் டிருப்பது பாராட்டப்படக் கூடியது ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்மாதிரியான முயற்சி ஆகும்.

எம். வி.

## சித்த வைத்தியர் ஆணையாளர் சந்திப்பு

அ) சித்த வைத்திய முறையினையும், சித்தவைத்திய கூட்டுறவுச் சங்க செயற்பாட்டினையும் யாழ. பல்கலைக் கழகத்துறை அங்கீகரிக்க செய்வதறகு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை பற்றி கூ. அ. உ. ஆணையாளர் அறிக்கை சமர்பபிதழ்ல்.

ஆ) உற்பத்திப் பொருட்கள் அனைத்தும தரக்கட்டுப பாட்டிறகு உடபடுவதற்கான வழி வகைகள் பறறிய சாத்தியப பாடடறிக்கை சமர்ப்பிததல.

இ) சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும மருந்து வகைகளை வெளியாரிடம் கொள்வனவு செய்வதை தடை செய்யும் வகையில் பிரதேச சபை வைத்தியர்களை அழைத்து பிரசாரம் செய்தலும் வசதகளை ஒழுங்கு செய்தலும்.

ஈ) கிராமிய சுகாதார தொண்டர்களை சுதேச வைத்திய துறை நியமிக்கையில் கிராமிய தொண்டர்களாக கூட்டுறவு சித்தவைத்திய தொண்டர் களை உள் வாங்குவதற்கு அவசியமான நடவடிக்கை களை மேற்கொள்ளுதல்.

## புதிய பணிப்பாளர்

யாழ. மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய பணிப் பாளர்களாக பின்வருவோர் தெரிவு செய்யபட்டுள்ளனர்.

திரு. ச. செல்வரத்தினம் (தலைவர்) திரு. சி. கணபதிப் பிள்ளை (உபதலைவர்) பணிப் பாளர்கள் திருவாளர்கள். ச. குலசூரியன், ப. கனகலிங்கம், ச. த. கணநாதன், சி. பொன்னம்பலம், கா. கார்த்தகேசு, இ. மகேந்திரம், செ. மார்க் கண்டு.

## அதிகாரி ...

வேலணை பல நோ. கூ. சங்கம் ஆணயாளருக்கு இராப்போசன விருந்தளிததும் கௌரவிததது.

கூட்டுறவு அபி. உ ஆணையாளர்கள். திருவாளர்கள் தி. சபாரத்தினம, கே. பஞ்சலிங்கம், எஸ். ஜெயபாலன், ஆகியோரும் கலநது கொண்டார்கள்.

**'' கூட்டுறவே நாட்டுயர்வு ''**

## விளப்பர அன்பளிப்பு :

★ கட்டைவேலி - நெல்லியடி
பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்.
நெல்லியடி.

★ உடுப்பிட்டி பல நோ. கூ. சங்கம்
உடுப்பிட்டி.

★ தென்மராட்சி கழக்கு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம
கொடிகாமம்

★ அரியாலை பனை தெ. வள
அபிவிருத்திக கூட்டுறவுச் சங்கம்
அரியாலை.

★ சாவகச்சேரி பனை தெ. வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
சாவகச்சேரி.

யா, மா, கூ, சபை அச்சகத்தில் அச்சிட்டு 14, மணிக்கூட்டுவீதி மா. கூ. சபையினரால் மே மாதம் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org